[2002 ஏப்ரல் 29

முற்பகல் 10-50

256—

துணை மின் நிலையங்கள்

***19358—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரின் மின்சாரத் தேவைக்கேற்ப அங்கு துணை மின் நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் நகரில் ஏற்கெனவே நான்கு துணை மின் நிலையங்கள் உள்ளன. இருப்பினும், திருப்பூர் நகரின் மின்சாரத் தேவையைக் கருதி, மண்ணரை, நல்லூர், ஆண்டிப்பாளையம் ஆகிய மூன்று இடங்களில் 33/11 கிலோ வாட் துணை மின் நிலையங்களையும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அமைப்பதற்கான கருத்துரு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு மின் கட்டணமாக பத்து கோடி ரூபாயைச் செலுத்துகின்ற திருப்பூர் நகருக்கு, மண்ணரை, நல்லூர், ஆண்டிப்பாளையம் ஆகிய இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்து அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதோடு செட்டிபாளையம், அருள்புரம் போன்ற பகுதிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கோவை மாவட்டத்தில் மின்சாரத் துறையினுடைய S.E. ஆபீஸ் மூன்று இருக்கின்றன. மூன்றும் கோவை மாநகரத்திலேயே இருக்கின்றன. அதிலே கோவை S.E. (தெற்கு) என்பது திருப்பூர், பல்லடம், சோமனூர், குனியமுத்தூர் போன்ற பகுதிகளுக்கு உட்பட்டதாகும். S.E. (வடக்கு) என்பது வடவள்ளி, துடியலூர், மேட்டுப்பாளையம், அவினாசிக்கு உட்பட்டதாகும். திருப்பூர் கோட்டாட்சியருடைய எல்லைக்குட்பட்ட திருப்பூர், பல்லடம், சோமனூர் கட்டுப்பாட்டிலே இருக்கின்ற S.E.

2002 ஏப்ரல் 29]

(தெற்கு) ஆபீசிலே இருக்கின்ற குனியமுத்தூரை S.E. (வடக்கு)-க்கு மாற்றிவிட்டு, அதிலே இருக்கின்ற அவினாசியை S.E. (தெற்கு)-லே மாற்றி, S.E. (தெற்கு) ஆபிசை, கோவை மாநகரிலே இருப்பதை, திருப்பூர் நகரிலே மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்னுடைய தொகுதிக்கு நான் இரண்டு S.E.-க்களிடம் போகவேண்டியிருக்கிறது. எனவே, கோவை மாநகரிலே இயங்கி வருகின்ற அந்த மூன்று S.E. ஆபீஸ்களில் ஒன்றைத் திருப்பூர் மாநகருக்கு மாற்றித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அமைச்சரிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 257, திரு. லா. சந்தானம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

257—

தொழிற்சாலை

***3111—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் பூக்கள் அதிகமாக விளைவதால் உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில், உசிலம்பட்டியைத் தலைமையிடமாகக்கொண்டு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.